செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம் : சர்வஜித் ௵ (1889) ஆவணி மீ 28 உ., அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

பிரதி விலை: சதம் 1

புத்- ௮௰] யாழ்ப்பாணம்- கீலக ௵ ஐப்பசி மீ ௨ உ வெள்ளிக்கிழமை (18-10-1968) [இல-௨

தீபாவலியும் அகத் தூய்மையும்

— காரைநாடன் —

தீபாவலி என்னும் பதமானது தீபம் + ஆவலி எனப் பிரிந்து தீபங்களின் தொடர்ச்சி அல்லது வரிசை எனப் பொருள்படும். மங்கள கரமாய செயல்களைத் தொடங்கும் போதெல்லாம் நாம் தீபமேற்றி வைத்தே அவற்றைத் தொடங்குகின்றோம். தீபத்தை இலக்குமி எனக்கொள்ளும் பண்பு பண்டு தொட்டு நம்மிடை நிலைத்து வந்துள்ளது.

ஐப்பசி மாசத்து அபரபக்கச் சதுர்த்தசி தினமே தீபாவலி எனக் கொள்ளப்பெறும் அன்றைய தினத்து உஷத் காலத்தில் திருமாலானவர் நரகாசுரனைக் கொன்றதாகவும் ஆகவே அன்று அதிகாலையில் எழுந்து யாவரும் தைலஸ்நானம் கொண்டு புத்தாடையணிந்து இறைவனை வழிபட வேண்டும் என்பதும் நூற்றுணிபு.

தீபாவலி தினத்தன்று தைலஸ்நானம் செய்தோம் புறத்தூய்மைஏற்பட்டுவிட்டது புத்தாடை அணிந்தோம் குதூகலம் அடைகின்றோம் இல்லத்துத் தீபங்களை ஏற்றுகின்றோம் இச்செயல்கள் யாவும் எதற்கு? நமக்கும் நாம் வாழும் இல்லிற்குமேயாம்.

சற்று ஆழ்ந்து சிந்திப்போம். உடம்பிற்குள் உயிர் (ஆன்மா)வாழுகின்றது உயிருக்குள் உயிராய் இறைவன் வாழுகின்றான் நாம் வாழும் இல்லினை மங்களகரமுடைய தாக்கி நாமும் புறத் தூய்மை கொண்டு மங்களகரமாக வாழ்ந்து கொண்டே நாம் நமக்குத்துரோகம் செய்கின்றோம் எப்படி?

அன்றைய தினம் நம்மிற்பலர் மதுபானம் அருந்துகின்றனர். கொலை புரிகின்றனர் பலதுர்ச் செயலகளில் ஈடுபடுகின்றனர். இவ்வகைச் செயல்களால் கேடு யாருக்கு? நமக்கும் (ஆன்மாவுக்கும்) இறைவன் வாழும் இல்லமாகிய நமது இதயமாகிய கோயிலுக்குமேயாம்.

> "உள்ளம் பெருங்கோவில் ஊனுடம் பாலயம்
> வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவல் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே"

மேற்கண்ட செய்யுளைச் சிறிது நோக்குவாம். இறைவனின் ஆலயம் உடம்பு. உள்ளம் பெருங்கோவில். இறைவனின் நிர்த்த சபை. நமது வாய் தான் கோபுரவாசல். நமது சீவனே இறைவன். அருவுருவாய் நின்று ஆன்மாக்களை ஈடேற்றும் சிவன் சீவனைத் திருமேனியாக்கிக்கொண்டார் ஐம்புலன்களும காளாமணிவிளக்குகள்.

மேலும் சற்றுச்சிந்திப்போம். இறைவனின் ஆலயத்தின் கோபுரவாயிலான நமது வாயினால் மது அருந்தலாமா? மாமிசம் உண்ணலாமா? அடாத வார்த்தைகளைக் கூறலாமா? ஆலயமாய உடம்பை மதுவாலும் மாமிசத்தாலும் அசுசிப்படுத்தலமா? சீவனாகிய சிவலிங்கத்தை அசுசிப் படுத்தப்பட்ட உடைகளில் [illegible] லாமா? ஐம் புலன்களாகிய காளாமணி விளக்குகளை (ம [illegible]) யாவும் செயலற்ற மயக்க நிலையில் ஒளி [illegible] அவித்து விடலாமா?

ஆகவே புறத்தூய்மையிலும் அகத்தூய்மையே மிகத்து. மேலும் மது மாமிசம் என்பவற்றால் புறவுட் புகத் தீமையும் ஏற்படுகின்றது.

"உடம்பா ரழியின் உயிரா ரழிவர்" என்றனர் ஆன்றோர். ஆகவே உடம்பழிந்து உயிரழிந்துவிட்டால் நாம் புவனியிற் பிறந்ததாற் பயன் என்னை?

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பழித்திலங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடைமதனனைப்பொடியா
விழித்தவன் றேவிவேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்திமுன் னரற்றுஞ் செழுங் கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன் றிரைகள்கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

நாவலர் நல்வாக்கு

நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதோன்றன் உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?

காரைநகர் இந்து இளைஞர் மன்றத் தீர்மானம்

"இன்றைய அரசியற் சூழ்நிலையில் சைவசமயத்துக்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலையை நோக்கி அஞ்சியும் கோணேஸ்வரர் ஆலய புனிதத் தன்மையைக் காப்பாற்று முகமாகவும் இற்றைக்குப் பல்லாண்டுகட்கு முற்பட்ட சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததும் ஈழத்திலுள்ள பாடல் பெற்ற சைவத் தெய்வத் தலங்களுள் ஒன்றாயதும் ஆய திருக்கோணேஸ்வரர் ஆலயப் பிரதேசத்தைச் சைவ புனித நகரமாகப் பிரகடனம் செய்யும் வண்ணம் கனம் பிரதம மந்திரியவர்களையும் இதர அரசியற் தலைவர்களையும் விநயத்துடன் வேண்டுகின்றோம்"

மேற்கண்ட தீர்மானம் சென்ற 13-10-68 ல் நடைபெற்ற காரைநகர் இந்து இளைஞர் மன்ற வருடாந்தக் கூட்டத்தின்போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது [illegible] மன்ற வளர்ச்சிக்காய பல ஆலோசனைகளும் மேற்கொள்ளப் பட்டன. அதைத் தொடர்ந்து புது வருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

போஷகர்கள் திரு. ஆ. தியாகராசா. M. A, M. LITT அதிபர் காரைநகர் இந்துக் கல்லூரி, திரு. சு இராசசேகரம் J. P. திரு ந. கனகநாயகம். தலைவர்: க. செல்வரத்தினம், உப தலைவர்: டா. வீ. சிறில், காரியதரிசி: ந. குஞ்சிதபாதம், உப காரியதரிசி: ஜெ தில்லையம்பலவாணர், தனதிகாரி: க. கனகசபை, உப தனதிகாரி: ஆ. அருளானந்தம். மேலும் சு இரத்தினசபாபதி, க. பேரம்பலம், பொ. இராசரத்தினம் ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

(காரைநகர் நிருபர்)

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.



மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்

நேயர்கள் நெஞ்சம்

ஆலயங்களின் புனிதத் தன்மை காக்கப்படுதல் வேண்டும்

ஆலயம் என்பதற்குக் கடவுளின் திருவடிகளில் ஆன்மாக்கள் பொருந்தியிருப்பதற்கு ஏற்ற இடம் என்பது பொருள். கடவுள் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக வியாபித்து இருந்த போதிலும் ஆலயத்தில் தான் சிறப்பாக வெளிப்பட்டு நின்று அருள்புரிகின்றார். சைவ ஆலயங்கள் சாதாரண கட்டடங்களல்ல. அவை மின்சார நிலையங்கள் போன்றிருக்கின்றன.

ஆகாயமெங்கும் வியாபித்திருக்கும் மின்சாரசத்தியை மின்சாரநிலையம் மூலம் ஈர்த்துப்பலரும் அவரவர் நிலைக்குத் தக்கதாகத் தத்தம் இடத்திலிருந்து அதன் பயனை அனுபவிக்கக் கூடியதாக வழங்கப்படுகின்றது. இத்தகைய மின்சார நிலையங்களுக்குள் எல்லோரும் போகலாமா? அதன் தத்துவங்களை அறிந்து அதற்குள் சென்று 'நடமாடக் கூடிய பயிற்சியும், பாதுகாப்பும் உள்ளவர்கள்தான் போகலாம். பயிற்சியும், பாதுகாப்பும் இல்லாதவர்கள் உள்ளே போனால் பெரும் துன் துக் காளாகவேண்டி நேரிடு அதனால் அவர்களுக்கு அந்த நிலையத்துக்கு இடையூறு ஏற்படக்கூடும

இதுபோலவே எங்கு வியாபித்திருக்கும் தெய்வீ சக்தியை மந்திரவலிமையா யந்திரஸ்தாபனமும்பிராண பிரதிஷ்டையும்செய்யப்பெ றமூர்த்தங்கள் ஸ்தாபிக்கப் பெற்ற ஆலயங்கள் தெய் வீக சத்தியை இடைவிடா பரப்பிக் கொண்டிருக்கின் றன அவை வேண்டுவா வேண்டியவற்றை வேண்டிய படியே ஈயவல்ல ஆற்றல் வாய்ந்தவை ஆலயங்களில் நடைபெறும் பூசைகள் இ த் திருவுருவங்களினின்று வழிந்தோடும் அருளாற்றலை வெளிப்படுத்துகின்றன. அங் குள்ளமூர்த்தங்களின் திருவுருவப்பொலிவும், கர்ப்பூரம், சாம்பிராணி, நறுமலர் ஆகியவைகளின நறுமணமும, சங்கு சேமக்கலம, மணி, மேளவாத்தியம முதலியவற்றின் ஒலியும அன்பர்கள் இறைவனை வாழ்த்தும் வாழ்த்தொலியும் நம்மை பரவசப்படுத்துகின்றன ஆலயவழிபாட்டுக்குவருப அடியார்களின் தூய எண்ண அலைகள் நம நுண்ணுடம்புகளைத் தொட்டு அவைகளைத் தூய்மையாக்கின்றன நமமனம தூய்மைப்பட வேண்டுமானால, அதனைத் தூய்மை மனமுடையோர் கூடும் ஆலயத்தில்தான் பெறமுடியும்.

வீண வேடிக்கைகளும், ஆசாரயீனமும் ஆலயத்தின் புனிதத்தன்மையைக் கெடுத்துவிடும். ஆதலாற்றான் அவற்றுள் எத்தகைய ஆசார அநுட்டானங்களை அநுட்டிப்பவர்கள் செல்லாமென்றும், எப்படிவழிபட வேண்டுமென்றும வகுக்கப் பெற்றிருக்கின்றது

பூசை செய்யும்தகுதிவாய்ந்தவர்களும், பூசைசெய்வோருக்கு உதவி செய்யும தகுதியுடையோரும கர்ப்பக்கிரகம, அர்த்தமண்டபம, மகாமண்டபம ஆகியவற்றட பிரவேசிக்கலாம சமயதீட்சை பெற்றவர்களுள் ஆசௌசம இலாதவர்கள் சைவாசாரமுறைப்படி ஆலயத்தின் பிரதான வாயில் (இராச கோபுரம்) உள்சென்று சுவாமிதரிச

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

தீபாவலி வாழ்த்து

வாசக நேயர்கட்கும் மற்றும் அபிமானிகட்கும் தீபாவலித் திருநாளில் அஷ்டைஸ்வரியங்களையும் இஷ்ட சித்திகளையும் நல்க வேண்டுமென்று இதய பூர்வமாக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

எங்கள் அறிவித்தல்

எதிர்வரும் (21-10-68) திங்கட்கிழமை தீபாவலித்திருநாளை முன்னிட்டு எமது காரியாலயத்திற்கு கருமமாற்றுவோருக்கு விடுமுறை நாளாகும் என்பதை அன்பர்கட்குத் தெரிவிக்கின்றோம்.

— அதிபர்

இந்து சாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

கீலக ஞூ ஐப்பசி மீ உ-உ வெள்ளிக்கிழமை [1968]

திருக்கோயிற் திருவிழாக்கள்

இவ்வருடம் கந்தசஷ்டி விரதம் ஐப்பசிமீ கூ-உ செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது. முருகனடியார்கள் அம்மாத அமாவசைக்குப்பின் வருகின்ற பிரதமை முதலாறு தினங்களிலும் காலையில் ஸ்நானஞ் செய்து சுத்த வஸ்திரம் இரண்டு தரித்து சந்தியா வந்தனம் முடித்து முருகக்கடவுளைப் பூசித்து அவருடைய புராணத்தைப் படித்து சிறிது ஜலத்தை ஆசமித்து உபவாசமிருப்பார்கள். சப்தமிதிதியில் முருகக்கடவுளுக்கு விசேஷ பூசையியற்றி விதிப்படி பாரணஞ் செய்வர். இவ்வாறு தினங்களிலும் தேவர்களும் முனிவர்களும் கந்தசஷ்டி விரதத்தையநுட்டித்து இழந்தபதங்களைப் பெற்றார்களென்பர்.

நமது நாட்டில் பொதுவாக எல்லா ஆலயங்களிலும் சிறப்பாக முருகனாலயங்களில் கந்தசஷ்டி நோன்பு அநுட்டிக்கப்படும். சூரபன்மன் முருகக்கடவுளுடன் ஆறுநாட் போர்செய்தபின் முருகப்பெருமான் தமது ஞானசத்தியாகிய வேலாயுதத்தினால் அவனது உடலை இருபிளவாக்கி ஒன்றினை மயிலாகவும் மற்றையதைச் சேவலாகவும் தோன்றச்செய்தார். மயிலினைத் தமக்கு ஊர்தியாகித் தம்மைச்சுமக்கவும் சேவலைத் தனது தேரின்மீது அமர்ந்து கூவிக்கொண்டிருக்கவும் கருணை பாலித்தார். ஆறுமுகக்கடவுளுடைய திருவருள் நோக்கத்தினால் தீமைகள் நீக்கப்பெற்று அவன் நல்லறிவு பெற்றான்.

தீயவை புரிந்தா ரேனுங் குமர வேடிகுமுனுற்றுற்
றாயவ ராகி மேலைத்தோல் கதியடைவரென்கை
பாயவும் வேண்டும் கொல்லோ வடசெமரிங்காட்செய்த
மாயையின் மகனுமன்றே வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்

ஆலயங்களில் ஆறும் நாள் சூரன் போர் என்றழைக்கப்படும் விழா நிகழும். இவ்விழாவை அடியார்கள் பக்தி சிரத்தையுடன் நடத்துதல் வேண்டும். விழாவில் அடியார்கள் தத்தம் ஆற்றலுக்குரிய தொண்டுகளைப்புரிதல் வேண்டும். குடைபிடித்தல், தீவர்த்தி தாங்குதல், வாகனங்காவுதல், திருமுறைப்பாராயணம் போன்ற சரியைத் தொண்டுகளை அவர்கள் புரிதல் வேண்டும். இத்தகைய தொண்டுகளைப்புரிதலுக்கு அவர்கள் வெட்கமடையக்கூடாது. இத்தகைய தொண்டுகளினால் அவர்களுடைய மனம் வாக்குக் காயமாகிய திரிகரணங்களும் தூய்மையடையும் அவற்றினால் செய்த பாவங்கள் நீங்கிவிடும். கிரியைகள் ஒருவனுக்கு ஞானத்தை நல்கும்.

பெருமைவாய்ந்த கிரியைகளின் தத்துவங்களை உணராது அவற்றைப் பிழையாகப் புரிகின்றவர்கள் ஒருவிதமான நன்மையையு மடையமாட்டார்கள் பாவத்துக்குள்ளாவார்கள். கோயில் பூசகர்களும் அதிகாரிகளும் இவ்விஷயத்தில் சிரத்தையுடையவர்களாயிருத்தல் வேண்டும். அப்போதுதான் அடியார்கள் அவர்களைப்பின்பற்றிப் பயபக்தியுடன் கிரியைகளைப் புரிவார்கள். அண்மையில் ஒரு சிவத்தலத்தில் நடைபெற்ற மானம்பூ விழாவில் சுவாமியைக் காவிச் சென்றவர்கள் கவனக்குறைவினால் வாகனத்துடன் சுவாமியைக் கீழே விழவிட்டார்களென்ற செய்தி யாவருக்கும் பெருங்கவலையையுண்டாக்கிவிட்டது.

இவ்வித அனர்த்தங்கள் நாட்டுக்குப் பெருந் தீமை விளைக்கும் கோவில் விழாக்களைப் பாவைப்பிள்ளை விளையாட்டாகினால் மக்கள் அவற்றின் புனிதத் தன்மையை உணரமாட்டார்கள். நற்பேற்றையும் அடையமாட்டார்கள்.

கோயிலதிகாரிகளும் கோயிற் பூசகர்களும் வழிபடுபவர்களும் இவ்வித அனர்த்தங்களைத்தவிர்த்து விழாக்களை முறையாக நடத்திச் சைவசமயாபிவிருத்தியையும் ஆன்மாக்களின் சேமத்தையும் பேணுவார்களாக.

○

தீபாவலிப் பண்டிகை

மறத்தை அறம் வெற்றி கொண்டமையை நினைவு கூர்வதே தீபாவலிப் பண்டிகையின் நோக்கம். ஆகையினால் தீபாவலித் தினத்தைப் புனித நாளாகக் கொண்டாட வேண்டும். சூரியோதயத்திற்கு இரண்டுநாளிகைக்குமுன் மக்கள் தங்கள் இல்லங்களில் தீபங்களை நிரையாக ஏற்றி அவற்றுக்கு முன்பாக அமர்ந்து எண்ணெய் தேய்த்துப் பின் முறையாக ஸ்நானஞ் செய்து கோடி வஸ்திரம் தரித்தல் வேண்டும். ஆலயத்துக்குச் சென்று சுவாமிதரிசனஞ்செய்து கொண்டு வீட்டுக்குவந்து சுற்றத்தவர்களுடன் உணவருந்தியபின்பு உறவினர் முதலியவர் வீடுகளுக்குச் சென்று அத்தினத்தை நல்லவர்களுடைய சகவாசத்துடன் கழிக்கலாம்

அத்தினத்தில் மதுபானம் அருந்துதல் மாமிசம் புசித்தல், சீட்டாடல் முதலிய பாவங்களைப் புரிதல்கூடாது தவக்காலமாக அந்நாளைக் கழிக்கின்றவர்கள் இறைவனுடைய அநுக்கிரகத்தைப்பெறுவார்கள். அறியாமையினால் பலர் பாவநெறியில் இத்தினத்தைக் கொண்டாடுகின்றனர் இச்செயல் குளிக்கப் போய்ச் சேறு பூசினதை யொக்கும்.

தீபாவலியும் அகத்தூய்மையும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நமது இல்லத்தில் தீபங்களை அடுக்கடுக்காக ஏற்றி வைத்தால் எவ்வளவு பிரகாசம் ஒளி உண்டாகின்றது அதுபோல் ஆண்டவனது இல்லில—நமது இதயக் கோவிலில் பிரகாசம் உண்டாகும்படிக்கு தீபங்களை ஏற்றவேண்டாமா? "கள்ளப்புலனைந்தும் காளாமணி விளக்'கல்லவா? ஆகவே ஐம்புலன்களையும் நல் வழிப்படுத்தி அவற்றை அவமே அவநெறியில் செல்ல விடாது தடுத்து—அப்புலன்கள நல்லனவற்றை நுகரவும் — நற் செயல்களைச் செய்யவும் வழிகாட்டினால் —நல் வழிப்படுத்திப் புலன்களாகிய காளாமணி விளக்குகளைப் (பிரகாசமுண்டாகும்படிக்கு) ஏற்றி வைத்தால் எவ்வளவு மேன்மையுண்டாகும்?

"சரணகமலாலயத்தை அரை நிமிஷ நேர மட்டில்
தவமுறை தியானம் வைக்க ...." என்றார்

அருணகிரிப் பெருந்தகை. நாடோறும் நாம் நல்வழியில் வாழா விட்டாலும் தீபாவலி போன்ற இப் புண்ணிய தினங்களிலாவது மது, மாமிசம், கொலை முதலிய கொடிய செயல்களை நீக்கி அகமும் புறமும் தூயராய் வாழ்வாங்கு வாழ்ந்து வரம்பிலின்பம் அடைய முற்படல் வேண்டும்.

தொண்டின் மகிமை

"இன்றைய நிலையில் தொண்டு செய்தலே மிகவும் அத்தியாவசியமானது ஏழைகள் பசித்தவர்கள் பிணியாளர்கள் போன்றோருக்கு நாம் செய்யும் உதவி ஆண்டவனுக்குச் செய்கின்றதை யொக்கும் இறைவனிடத்தில் உண்மையான அன்புள்ளவர்கள் அங்கீகரிக்கப் பெற்ற தபாற்பெட்டியை ஒப்பர் அப்பெட்டியிலிடப்பட்ட விநியோகம் (தபால்)கள் உரியவரை உரிய நேரத்தில் அடைவதுபோல் உண்மையான அன்புள்ளவர்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனைச் சேரும். நாம் நமதுபணத் தினால் வெள்ளியாற் தபாற்பெட்டி செய்து அதில் விடுத்ததை இட்டால் அது போய்ச் சேராதவாறுபோல அன்பிலாதவர்களுக்குச் செய்யும் தொண்டு பயனற்றதாகும்"

இவ்வாறு அநுராதபுரம் விவேகானந்தசபை ஆதரவில் அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் "திருவருள்" என்னும் பொருள்பற்றி உரையாற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிட்டனர். மேற்படி சபைத் தலைவர் திரு. ச. நடராசா அவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயாது. சபையின் செயலாளர் திரு ம. கணேசமூர்த்தி நன்றியுரை நவின்றனர். காலைவேளையாகவிருந்தும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்து குருமகா சந்நிதானமவர்களின் அருளுரையைக் கேட்டு ஆனந்தத்துடன் சென்றனர்.

(எமது அநுராதபுரிநிருபர் ஸ்ரீப.ம.)

※ ※ ※

அன்பளிப்பு

கந்தர்சஷ்டி கவசம்

யாழ்ப்பாணத்தில் பலவித தர்மங்களுக்கும் நிதியுதவுகின்ற மில்க் வைற் சோப் தொழிற்சாலை அதிபர் கந்தசஷ்டி நோன்பு காலத்தில் முருகன் அடியார்கள் பாராயணஞ் செய்வதற்காக கந்தர் சஷ்டி கவசம் என்னும் தோத்திர நூலை அச்சேற்றி இலவசமாக வழங்குகின்றார் சத்துரு சங்காரவேற பதிகம் அபியுக்தர் தோத்திரம் போன்ற முருகப் பெருமானின் தோத்திரங்களும் மேற்படி நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

※ ※ ※

அநுதாபக் கூட்டம்

காலம்சென்ற சைவப்பெரியார் சுழிபுரம் திரு. மு. சிவப்பிரகாசம் அவர்களது பிரிவைக் குறித்து அநுதாபந் தெரிவிக்கும் பொருட்டு ஒரு பொதுக் கூட்டம் வழக்கம்பரை வாசிகசாலை மண்டபத்தில் 14-10 68 திங்கட்கிழமை பி. ப 5 மணிக்கு டக்டர் திரு என்.ரி சம்பந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது பலர் அவருடைய சேவைகளையும் பண்புகளையும் பாராட்டிப் பேசினர்.

நாவலர் வழியிற் செல்வோம்

"சைவமுந்தமிழும் அந்நியர் ஆதிக்கத்தின்கீழ் அடிமைப் பட்டிருந்த காலத்தில் அவற்றுக்கு விடுதலையளித்து தமிழ் மக்களின் மொழி, மத கலாச்சாரங்களைப் பாதுகாத்தபெருமை நாவலர்பெருமானுக்கே உரியது"

மேற்கண்டவாறு கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவிற் கலந்து உரையாற்றிய யாழ்/நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகத்தலைவர் திரு க. சொக்கலிங்கம (சொக்கன்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் "நாம் ஒவ்வொருவரும் நாவலர் காட்டிய பாதையில் செல்வோம் எனத்திடசங்கற்பம் பூண்டு சைவமும் தமிழும் வாழச் சேவை செய்வோமாக" என்றும் கூறினர்

கல்லூர் இசைச் செல்வன் திரு. கே. சந்தானகிருஷ்ணன் அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி அவருக்கு "கான வித்யா பிரவீண" என்னும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவின்போது ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான சுவாமிகள், திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் போஷகர்களாகவும், சி. ஆறுமுகம் வ. முத்துக்குமாரசாமி ஆகியோர் தலைவர்களாகவும் ஆர். பி. ஹரன் த. சதாசிவம் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும் வி. மாணிக்கம் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப் பெற்றனர்.

பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா அவர்கள் மேற்படி மன்றச் சமயபிரசாரகராகவும் சிவ ஸ்ரீ சோ. இரத்தினசபாபதிக்குருக்கள் கூட்டுப்பிரார்த்தனைச் சபைத்தலைவராகவும் பெருந் தொண்டாற்றுவர்.

—0—

ஆலயங்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் செய்யலாம். திருக்கோயிலினுள்ளே போதற்கு யோக்கியர்களல்லாதவர்கள் ஸ்நானஞ்செய்து, சுத்தமான ஆடை அணிந்து, விபூதி தரித்துக் கோயிலுக்குச் செல்லும்தினம் மச்ச மாமிசம் புசியாது,மதுபானம் அருந்தாமல் ஆசாரசீலராய்த் திருக்கோயிலின் புறத்திலே பிரதட்சணஞ் செய்து, திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக் கடவுளைத் தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

இவற்றை அனுட்டித்து மாசுமறுவற்ற சிந்தையுடனும் அருள்வேட்கையுடனும் ஆலயத்துக்குச்செல்வோர் இம்மை மறுமைப் பேறுகளை எளிதில் பெறலாம், இவற்றை அநுட்டியாது செல்வோர், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசியதுபோல் இம்மையிலும், மறுமையிலும் துன்பத்துக் காளாவார்கள் என்பது சைவ சமயிகளது நம்பிக்கை.

க. வயிரவநாதர்
வட்டுக்கோட்டை.

நாவலர் சொற் கேளீர்

புண்ணியங்களாவன யாவை?

கடவுளை வழிபடுதல், தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றியறிதல் முதலானவைகள்.

(சைவவினாவிடை முதற் புத்தகம்)

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் 616, காங்கேசன் துறைவீதி கே. எஸ். சுப்பிரமணியம் அவர்களிடம் 1967-ம் ௵ ஒக்ரோபர் ௴ 1-ந் திகதிக்கு (1-10-67) முன் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவுகள் 1968-ம் ௵ நவம்பர் ௴ 14 உ (14-11-68) வியாழக் கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கம் ஷெ அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
M, 240, 18, 23-10-68.

கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆழ்வாப்பிள்ளை செல்லையா பத்தமேனி, அச்சுவேலி
வழக்காளி
இல. M.B, 8485 எதிராக
சவிரிமுத்து சூசைப்பிள்ளையும் பெண் அகஸ்தீனம்மாவும்
பத்தமேனி, அச்சுவேலி
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8485-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968-ம் ௵ மார்கழி ௴ முதலாம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 2506-ம் 26-6-1966 தொடக்கம் 6-4-67 வரைக்கும் ரூபா 1500 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 282-81 இதில் கோட்டுச் செலவாக ரூபா 125 - கொடுபட்டுள்ளது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோவிற்பற்று பத்தமேனி இறை "வடக்கு சின்னாத்தோட்டம்" நில. பர. 2-ம் வீடும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு செல்லப்பா பெண் ஆசீர்வாதத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு சந்தியா பெண் நட்சேத்திரத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு மாட்டின் பெண் மரியப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு கிணறும் சூசைப்பிள்ளை சவிரிமுத்துவும் பங்காளரும் இதிக்கிழக்கெல்லையிலிருக்கும் வேப்பமரங்கள் புறநீக்கலாக செரிபலாய் அரைவாசிப் பங்கும் கிழக்கேயிருக்கும் கிணற்றில் அரைவாசிப்பங்கும்.

2. ஷெ "சாத்தவொல்லை" நில. பர 4, எல்லை கிழக்கு சவிரிமுத்து யோசேப்புவுக்கும் பெண் யோசேபினுக்குமுரிய ஆதனம் வடக்கு கார்த்திகேசு பெண் சின்னம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு முடிக்குரிய காணி தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் கிழக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

நீ. அன்ரலிப்பிள்ளை,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
(எம். 235 18-10-68.

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல M B 8876
1. அரசரத்தினம் கார்த்திகேசனும் பெண் 2 இந்திராணியும்
அம்மன்வீதி யாழ்ப்பாணம்
வழக்காளிகள்
எதிராக
1. முருகேசு விசுவலிங்கமும் பெண் 2. பொன்னுப்பிள்ளையும்
செட்டி வீதி நல்லூர்
யாழ்ப்பாணம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 8876-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1968-ஆம் வருடம் (நவெம்பர் கார்த்திகை மாதம் 25-ஆந் திகதி (25-11-68) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3345-ம் 25-2-67 தொடக்கம் 10-2-68 வரைக்கும் ரூபா 2000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 375-30ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை 'ஆறுமுகத்தார் வளவு' நி பர 4ம் 2 குளியும் இதில் கிழக்குப் பக்கமாய் பிரிவிடுதல் ஆக்கப்பட்ட நி. பர 2ம் 2 குளியும் கிணறும் பயிர்களும் இதன் எல்லை கிழக்கு கந்தையா கைம்பெண் சின்னம்மாவின் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு நடராசா பெண் பரமேஸ்வரியின் ஆதனம். தெற்கு ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் உரிமையாளருக்குரிய ஆதனம். இதில் அடுத்த பங்குக்குரிய கிணற்றுப் பங்கையும் வழி வாய்க்கால் பாவிப்புரிமையையும் நீக்கி இவையடங்கலும்.

I. A. எட்வேட்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நாரந்தனை தெற்கு.
ஊர்காவற்றுறை, 12—10—68.
எம். 233, 18—10)

நாவலர் நல்வாக்கு

பிறர் பொருளானது, உடல் உயிர் இரண்டிற்கும் ஊறு செய்தலால், உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்திலும் கொடியதாம்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

1, சின்னட்டி முருகரும் பெண் 2. வள்ளிப்பிள்ளை
இருவரும் ஒட்டுமடம் யாழ்ப்பாணம் —வழக்காளி
இல. M.B. 9566 எதிராக
கந்தையா நாகேசு கைம்பெண் சீதேவி 19/15 செபஸ்ரியான் ஒழுங்கை, ஒட்டுமடம் யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9566-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1968 ம் ௵ கார்த்திகை ௴ 10 உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 2580-ம் 14-11-67 தொடக்கம் 7-6-68 வரைக்கும் ரூபாய் 2,000-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 435 சதம் 97

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை "கட்டியன் வளவு" நிலப்பரப்பு ஒன்று செய்பயிர்வகை வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் கந்தையா நாகேசுக்குரிய ஆதனம், வடக்கு வள்ளிப்பிள்ளைக்குரிய ஆதனம் (இது படத்தில் 3 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கிறது.) அதாவது 8 அடி அகலம் 2, 3/10 குளி இதை ஒழுங்கையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கு கந்தையா நாகேசுவுக்குரிய ஆதனம் இதடங்கலும்.

"கமலபதி"
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு,

மு. நவரத்தினராசா
கோமிசனரும், விலைமதிப்பாளரும்
(எம், 239. 18—10—68

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சோமநாதர் கதிர்வேலு பண்ணாகம் தெற்கு சுளிபுரம்
—வழக்காளி
வழக்கு இல. M. B. 9461 எதிராக

நாராணி செல்லையாவின் கைம்பெண் வலளம் தனக்காகவும் வடலி அடைப்பு சங்கானை மேற்கு காலஞ்சென்ற நாராணி செல்லையாவின் ஆதனங்களின் பராமரிப்புக்காரியாகவும். தற்போது இல. 19.3-ம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9461-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி, 1968-ம் ௵ கார்த்திகை ௴ 7 உ வியாழக்கிழமை முற்பகல் 10- மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத் தொகை;— முதல் வட்டி ரூபாய் 2172-ம் 30-9-67 தொடக்கம் 29-5-68 வரைக்கும ரூபாய் 1750-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 519/60

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "வல்லை சிட்டி" நில. பர. 3. இளம்பனைகளும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் கைஒழுங்கை வடக்கு ஒருதுண்டு காணி 6 முழ அகலம் அதன் உரிமையாளர் முத்துக்குமாரு ஆனைசுந்தரம் மேற்கு கதிரேசு பொன்னையாவுக்கும் பெண் ராசம்மாவுக்குமுரிய ஆதனம். அதுடன் மேற்குறித்த 6, முழக் காணிக்குள்ளால் கிழக்கு கைஒழுங்கைக்கு போக்குவரவு உருத்தும். பதவு இல. 371/277.

19, சுவாமியார் வீதி.
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்,

சு. கந்தசாமி
கொம்மிஷனரும் விலைமதிப்பாளர்.
எம் 242 18—10—68

திருத்தி வாசிக்குக

சென்ற 27-9-68 இந்து சாதன இதழில் வெளிவந்த 9448ம் இலக்க கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தலில் ஆதன விபரத்தின் கீழ் படத்தின்படியும் 'அரெசின்'படியும் என்றிருப்பதை 'அளவின்' படியும் மேற்குப் 'புறக' என்றிருப்பதை மேற்குப் 'புறமாக' என்றும். 'வளமளிக்குடைய என்றிருப்பதை 'வள்ளிக்'குடைய என்றும் திருத்திக் கொள்ளக் கோருகிறோம்.

யாழ்ப்பாணம்

— ஐக்கிய இலாபநிதி —

1918-ம் ௵ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிந் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கவ வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 8085

சரவணமுத்து வீரசிங்கம்
ஞேரியாவீதி யாழ்ப்பாண
வழ
எதிராக
1. கந்தப்பிள்ளை பொன்
துரை
2. பெண் புவனேஸ்வரி
ருடைய வி
வண்ணார்பண்ணை
யாழ்ப்பா
எதிரா

யாழ்பாணப் டிஸ்திறிக் கோ
டின் M B 8085-ம் இலக்க
இல் எனக்குக கிடைத்த
டுக்கட்டளைப்படி, பின்னால்
ரிக்கப்படும் ஒரு துண்டுக
யை 1968-ஆம் ௵ டிசம்ப
16ம் (16-12-68)உ திங்கட்
மை முற்பகல் 10 மணி தொ
கம் அந்தக் காணிக்குள் நி
பிரசித்த ஏலத்தில் விற்கப்ப

தீர்வைத் தொகை:— மு
வட்டி ரூபாய் 16, 630-
26-3-66 தொடக்கம் 8-6
வரைக்கும் ரூபாய் 10,000-
12 வீத வட்டியும் அதன்
முழுத்தொகைக்கும் இறுக்
வரை 5 வீதவட்டியும்கோட்
செலவு ரூபாய் 487/70 இ
ரூபாய் 200/- கொடுக்கப்பட்
ளது

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்பா
டிஸ்திறிக் யாழ்ப்பாணப் ப
வண்ணார்பண்ணை கோவிற்பற்
வண்ணார்பண்ணை தென்கி
இறை 'புளுக்குத்தி'' தோட்ட
'தமிழ் மறுத்த தரையும்' நி
பர. 4 குளி 6(D 264/249ம்
க்கத்தில் பதிவு செய்யப்பட்
ளது) இதில் தெற்குப்பக்கம
பிரிந்தஆதனம் நிலப்பர 2 கு
4 ம் கிணறும் வீடும் பயிர்வக
களும் மற்றும் அதற்குச் சேர
வைகளும் உத்தரவு பெற்ற உ
ந்தர T. கந்தையா அவர்கள
14-9-60 ல் தயாரிக்கப்பட்
820 ம் இலக்கப் படத்தில் 2
துண்டாகக் காண்பிக்கப்பட்டிரு
கும் 8½ குளி கிரானல் கொ
கைபொழுங்கையில் அரைவாசி
பங்கும் குறித்த தெற்குப்பக்
மாக இருக்கும் நில பர 2 கு
4 ம் வீடும் கிணறும் மற்று
அதற்குச் சேர்ந்தவைகளும் மே
குறித்த ஒழுங்கையில்அரைவாசி
பங்கும் எல்லைகிழக்கு மதியாப
ணம் கைம்பெண் இரத்தினத்து
குரியஆதனம் வடக்கு கையிலா
பிள்ளை சின்னத்துரைக்கும்பெ
அன்னரத்தினத்துக் குரிய ஆ
னம் மேற்கு கைஒழுங்கைதெற்
கார்த்திகேசு வைத்திலிங்கத்து
கும் பெண் மணியம்மாவுக்கு
ரிய ஆதனம்

அ. பேரா எதிர்மணசிங்
கொமிசனரும் விலைமதிப்பாளரு
14 டேவிட் வீதி, யாழ்ப்பாண
10-10-68 எம். 234 18 - 1

'அற்ரு ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி'

உ
படித்துவிட்டீர்களா ....?
சைவபரிபாலனசபைவெளியீடு

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
எழுதிய

"நாவலர்"

விலை: ரூபா 1-00

தொகையாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மனேஜர்,
சைவப்பிரகாசஅச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்

கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னக்குட்டி நல்லதம்பி ஏளாலை —வழக்காளி
ல M B 8998 எதிராக
ஆறுமுகம் சண்முகம் தனித்தும் தனது மனைவி காலஞ்சென்ற
ராசமணியினது சட்டபூர்வமான பிரதிநிதியும் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8998-ம் இலக்க ழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் பரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968-ம் ௵ கார்த்திகை மீ உ சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் ாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:— முதல வட்டி ரூபாய் 714-ம் 7-4-67 தாடக்கம் 2-11-67 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 8 வீத வட் டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட் டியும் கோட்டுச் செலவு ரூபாய் 292-49 இதில் கோட்டுச் செல வால் ரூபா 100-கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் குதி மல்லாகம் கோயிற்பற்று ஏழாலை இறை "ஆனைப்பாகன் ாடு" கில. பர. 8 குளி 11 செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் மற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வையிலத்துவ ற்கும் 3 தென்னைமரங்களில் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை டக்கு வேலுப்பிள்ளை கதிரித்தம்பி யினுடையவும் மேற்கு வல்லிபு செல்லத்துரைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் தெற்கு ரோட்டு. இதடங்கலும் பதிவு இலக்கம் H 240/74

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
2, கோவில் வீதி,
ாழ்ப்பாணம்.
எம். 236 18-10-68.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

அச்சுவேலி கிராமச்சங்கம் —வழக்காளி
ழக்கு இலக்கம். M B 4509 எதிராக
அச்சுவேலி வேலன் நாராணி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 4509-ம் இலக்க ழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் பரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி என்னால் 1968-ம் ௵ ார்த்திகை மீ 16-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தாடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற் ப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1801-80 சதமும் ரூபா 1365-00 க்கு 11-1-1961 தொடக்கம் 25-7-63 வரை 2 வீதமான வட்டியும் அதன்மேல் முழுததொகைக்கும் இறுக ும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 28-87 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் குதி அச்சுவேலிக் கோயிற்பற்று அச்சுவேலி இறை "ஆவலை" ர. கி. இல. நாலு (பர. கி. இல 4) எல்லை கிழக்கு நாகன் பெண் சயபிக்குரிய வாதனம் வடக்கு பண்டாரம் குமாரசூரியருக்குரிய ாதனம் மேற்கு சிவனவன் சுவாந்தனுக்குரியவாதனம் தெற்கு திரன் செல்லனுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் இதடங்கலும் டகிழக்கில் இருக்கும் கிணற்றிலபாகமும், வழிவாய்க்காலுரித் ம்.

ாரைநகர், 1968-ம் ௵ வை. ஏரம்பமூர்த்தி
ரட்டாதி மீ 15 உ. கொம்மிஷனரும் ஏலவிற்பனையாளரும்'
(எம். 237 18-10-68)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டிலே

ஸ்நோக்குக் கூட்டுறவுச்சங்கம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி
ல- M B 8875. — வழக்காளி
(சங்கம்)

எதிராக

ன்னையார் கோவிலுக்கருகில், பருத்தித்துறை வீதி, நீர்வேலி
பொன்னம்பலம் செல்வரத்தினம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8875-ம் இலக்க ழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விப க்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1968 ஆம் ௵ நவெம்பர் ாதம் 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (24-11-68) முற்பகல் -30 மணி தொடக்கம் அவ்வக்காணிகளுக்குள் நின்று பிரசித்த லத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1,130—80-ம் இன்னும் 25-2-67 தாடக்கம் 12-12-67 வரைக்கும் ரூபா 932-40-க்கு 4 வீத ட்டியும் அதன்பின் கூடிய தொகைக்கு 12-12-67 தொடக்கம் றுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 60—74-ம்

காணி விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் டக்குப்பகுதி, கோப்பாய் கோயிற்பற்று, நீர்வேலி இறை "போத ங்கபுலம்" நி. ப. 3½-யும் பனைகளும் எல்லை கிழக்கு சிதம்பரப் ள்ளை நல்லதம்பிக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு ன்னையா பெண் தங்கம்மாவின் ஆதனம், மேற்கு ராஜா ரோட்டு, தற்கு அம்பலவாணர் கைலைமயனை செல்லச்சிக்கும் மற்றவர்க ருக்குமுரிய ஆதனம், இதடங்கலும் ஆனால் கிழக்குப்பக்க ஆதன ாருக்கு இதன் தெற்கு எல்லையோரமாயுள்ள வழியுரிமை பிற கொல்லாச. பதிவு இல. K.189/214

2. மேற்படி நீர்வேலி இறை "வாரப்புலம்" நி. ப 4-ம் னையும் இருப்பைகளும், கிழக்கு வேலியிலுள்ள வேம்பில் ங்கும், எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் சின்னம்மாவின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கும் தெற்கும் சம்பந்தர் ஜனரத்தினத்தின் ஆதனம், இதின் செரியளவாய் அரைவாசி தவு இல. K- 189/215.

3. மேற்படி நீர்வேலி இறை "பூலோகசிட்டி" நி. ப. 2-ம் வடலிகளும் எல்லை கிழக்கு சபாபதி அருளம்பலத்திற்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு செல்லத்துரை பெண் ஆச்சிக்குட்டிக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு சின்னையம்பலம் மகன் சிவபாக்கியத்தின் ஆதனம், தெற்கு பர மனுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம் இதடங்கலும் பதிவு இல. K- 189/216

S. இரத்தினசபாபதி, J. P.
ஆரேசன் ரோட், கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
கோண்டாவில், 10-10-68. (எம். 230 18-10-68)

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B 9133
1. விசுவநாதர் தாமோதரம்பிள்ளையும் மனைவி
2 சின்னப்பிள்ளை இருவரும் நீர்வேலி வடக்கு, நீர்வேலி —வழக்காளிகள்

எதிராக

1 சின்னப்பு வைத்திலிங்கமும் மனைவி
2. சின்னப்பிள்ளை இருவரும் நீர்வேலி வடக்கு நீர்வேலி. எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 9133-ம். இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1968-ம் ௵ ஐப்பசி [illegible]) மீ 27-ந் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 3495/-ம் 6-6-67 தொடக்கம் 21-2-68 வரைக்கும் ரூபாய் 2200/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 336 சதம் 60 அதாவது ஏற்பட்ட செலவு ரூபாய் 221 சதம் 30 வெளியாத்துச் செலவு ரூபாய் 54 சதம் 35 இனிமேல் வரும்செலவு ரூபாய் 60 சதம் 95.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "சிவலைப்பிள்ளையான் கலட்டி" பரப்பு நிலம் 8, வீடும் கிணறும் பயிர்களும்.

கிழக்கு:— விஞர் [illegible] பெண் சின்னம்மாவுடையதும் மருமபேர்களுடையதும் காணிகள். தற்போது ஒழுங்கை

வடக்கு:- ரோட்

மேற்கு:- சண்முகநாதன் மனைவி செட்டன செமமாலை உடையதும் பங்காளருடையதும் காணி.

தெற்கு:- கந்தையா பெண், வள்ளிப்பிள்ளையினுடையதும் மகபேர்களுடையதும் ஆதனம் பதிவு இல. K. 219/230

எ. பி. பீ. எதிர்மன்னசிங்கம்
கொம்மிஷனர், விலைமதிப்பாளர்.
107, பெரியதெரு,
யாழ்ப்பாணம், 28-5-68
(எம் 231 18-1/-68)

பிஸ்கால் விற்பனை

இலக்கம்: எம் பீ. 8627
யாழ்ப்பாண மாவட்டக் கோட்டில்
யாழ்ப்பாணம் பிஸ்கால் ஆபீஸ்
10/10/68.

1. வல்லிபுரம் தம்பு
2 பெண் கனகம்மா, இல 14, ஆறுக்கு ரோட், நல்லூர், யாழ்ப்பாணம் — வழக்காளிகள்

விரோதமாக

1. இலட்சுமணர் மயில்வாகனம்
2. இலட்சுமணர் மயில்வாகனம் மகள் புஷ்பராணி, விலக்தெரு, சிவியாதெரு, யாழ்ப்பாணம்.
எதிராளிகள்

மேற்சொல்லிய வழக்கில் கோட்டால் அனுப்பப்பட்ட கட்டளைப்படி, 1968-ம் ஆண்டு, கார்த்திகைமாதம், 9-ந் திகதி சனிக்கிழமை, பி. ப. 3 00 மணியளவில் இதன் கீழ் காணப்படும் ஆதனத்தை பிரசித்த வெந்தியில், அக்காணிக்குள் நின்று விற்கப்படும்

தீர்வைத் தொகை ரூபா 4000/- இதற்கு 22/11/66 தொடக்கம் 20.9 67 வரை 5 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவும், பிஸ்கால் செலவுகளும், பவுண்டேசுக் அறவிடப்படும். காணியின் பெறுமதி: ரூபா. 12, 500/-.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை, "பிறைவடி வளவு" கில. பர 3, குளிகள் 15.63, ஆவோரந்தர மேஸ்தர் எ. லாசரஸ் அவர்களால் 23.10.67-ல் அளந்து விந்தரிக்கப்பட்ட 1852 எ. இலக்கப்படத்தில் 1ம் நம்பர் துண்டு, இதற்கு எல்லை, கிழக்கு: இராசையா பெண் புனிதமும், சின்னையா பெண் பொன்னுச்சாமியின் உரிமைக்காரனுதமாதனம், [illegible] சுப்பிரமணியம்பெண் இராசம்மா விஜுதனம், தற்போது முத்தி முருகேசு அவைஞ செல்லத்துரை விஜுதனம், மேற்கு சொல்லப்பட்ட படத்தின் 2ம்,3ம் நம்பர் துண்டுகள், தெற்கு கோயிரச்சு ரோட் இதுஅடங்கலும், அத்துடன் சொல்லப்பட்ட படத்தின் 5ம் நம்பர் துண்டில் கிணற்றுப் பங்கும், தூர்வையும், வழிவாய்க்காலும்.

சி. அ. மகாதேவன்
வடமாகாண பிஸ்காலுக்காக
10-10-68 {எம் 232 18-10-

கோட்டு விற்பனவு விளம்பரம்

நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை
இல. M,B. 8590 வழக்காளி

எதிராக

1 நா[illegible] கணபதிப்பிள்ளையும் பெண் 2 [illegible]ள்ளியம்மை [illegible] நெடுந்தீவு மேற்கு [illegible] எதிராளிகள்
சுண்ணாகம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8590-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக்காணியை, 1968-ம் ௵ 6-11-68 (கார்த்திகை) மீ 6 உ புதன்கிழமை பிற்பகல் 2-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல் வட்டி ரூபாய் 2,995/-ம் 7-11-66 தொடக்கம் 13-5-67 வரைக்கும் ரூபாய் 1,500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 307/-

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நெடுந்தீவு கோயிற்பற்று நெடுந்தீவு மேற்கு இறை "காலவிக்குளவளவு" ஏ 0 — ரூ 3 - பேர்ச் — 36. வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கந்தர் சின்னத்தம்பியின் ஆதனம், வடக்கு குளம், மேற்கு ஒழுங்கை, தெற்கு ஆறுமுகம் வயித்திலிங்கத்துக்குரிய ஆதனம் இதடங்கலில் பதிவு இல. C.275/99

2. மேற்படி இறை "கிழவிவளவு" பர நில இல. 20. வான்பயிர் செய்பயிர்களும். புளியமரம் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் அம்பலவாணர் இராமச்சந்திரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு முத்துக்குமாரு மகன் பொன்னம்மாவுக்கும் பங்காளருக்கும் நாகேந்திரர் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் தெற்கு நாகப்பர் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இடங்களில் ரோட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியை நீக்கி மேற் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய மிகுதியில பிரிவிடப்படாத ½ பங்கு காணி பதிவு இல. C.184/232

3 மேற்படி இறை "ஆரியன் வளவு" பர. நில. இல. 40. தோட்டமும், வீடு, கிணறும், தென்னைமரங்களும் இதற்கு எல்லை கிழக்கு கந்தர் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்கும் சின்னத்தம்பி கைம்பெண் சின்னம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு பசுபதி பெண் நாகமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு பசுபதிக்கும் பங்காளருக்கும் முருகர் சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு கந்தர் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்கும் முருகர் சவரிமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் உள்ள முழுவதிலும் வீடும், கிணறும், தென்னை மரங்களும் சேர்க்கப்படாதவை. மிகுதியாகவுள்ள முழுவதிலும் பிரிவிடப்படாத 2/9 பங்கு பதிவு இல. C.275/101

4. மேற்படி இறை "தென்னம்பிள்ளைத் தோப்பு" பர. நில. இல. 30. இதின் தென் கிழக்கில் பர. நில. இல 15 வான் பயிர்களும் தென்னைமரங்களும். இதற்கு எல்லை கிழக்கு சுப்பிரமணியம் பெண் சின்னப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கும் மேற்கும் முருகர் சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு வேலன் நாகமணிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய மிகுதியில தென்னைமரங்கள் சேர்க்கப்படாதவை. இதடங்கலின் பிரிவிடப்படாத ¼ பங்கு. பதிவு இல. C.375/102

நா. ஸ்ரீ இரங்கநாதன்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
22, பெருமாள்கோவில் தெற்கு ஒழுங்கை.
யாழ்ப்பாணம், 9-9-68 (எம். 238 18-10-68)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

ஆறிருதடந்தோள்வாழ்க அறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 18—10—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர். திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.